நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

அ.சா: 4 (LW 5)சாட்சியின் சான்றுரை

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசாமி. | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

30.01.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
------------------------------------------------------------------------

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் 12.04 பி.ப

நான் தேனி மாவட்டம் ஸ்ரீரங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தின்பொழுது நான் ஊரில் இல்லை. பார்வை மகஜரில் இருக்கும் கையொப்பம் என்னுடையதல்ல. எனது முன்னிலையில் எதுவும் நடக்கவில்லை. எனது முன்னிலையில் எதையும் கைப்பற்றவில்லை. அத்தாட்சியில் இருக்கும் கையொப்பம் என்னுடையதல்ல. நான் எதிலும் கையொப்பம் செய்யவில்லை. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.30 16:06:41 +0530

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியிடம் அரசு தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.08.2022ம் தேதி சுமார் 11.45 மணியளவில் நானும் சுந்தரேசன் என்பவரும் ஸ்ரீரங்கபுரம் வணிக வளாகம் அருகில் இருக்கும் கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபொழுது வீரபாண்டி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்களது முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. நான் எதையும் பார்க்கவில்லை. நான் பார்வை மகஜரில் கையொப்பமும் செய்யவில்லை. பின்பு, நான் சம்பவ இடத்திலிருந்து இரத்தம்பட்ட மண் மற்றும் இரத்தம்படாத மண் ஆகியவற்றை போலீசார் எனது முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் அதில் கையொப்பமும் செய்யவில்லை. விசாரணையின்போது விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலமாக தந்துவிட்டு தற்பொழுது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.09 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.30 16:06:46 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:30.01.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

அ.சா:5 (LW 6)சாட்சியின் சான்றுரை

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தரேசன். | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

30.01.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் 12.10 பி.ப

நான் தேனி மாவட்டம் ஸ்ரீரங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தின்பொழுது நான் தோட்டத்தில் இருந்தேன். பார்வை மகஜரில் இருக்கும் கையொப்பம் என்னுடையதல்ல. எனது முன்னிலையில் எதுவும் நடக்கவில்லை. எனது முன்னிலையில் எதையும் கைப்பற்றவில்லை. அத்தாட்சியில் இருக்கும் கையொப்பம் என்னுடையதல்ல. நான் எதிலும் கையொப்பம் செய்யவில்லை. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.30 16:06:52 +0530

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியிடம் அரசு தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.08.2022ம் தேதி சுமார் 11.45 மணியளவில் நானும் ராமசாமி என்பவரும் ஸ்ரீரங்கபுரம் வணிக வளாகம் அருகில் இருக்கும் கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபொழுது வீரபாண்டி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்களது முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. நான் எதையும் பார்க்கவில்லை. நான் பார்வை மகஜரில் கையொப்பமும் செய்யவில்லை. பின்பு, நான் சம்பவ இடத்திலிருந்து இரத்தம்பட்ட மண் மற்றும் இரத்தம்படாத மண் ஆகியவற்றை போலீசார் எனது முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் அதில் கையொப்பமும் செய்யவில்லை. விசாரணையின்போது விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலமாக தந்துவிட்டு தற்பொழுது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.11 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.30 16:06:57 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:30.01.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

அ.சா:6 (LW 7)சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயகுமார். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

30.01.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் 12.20 மு.ப

நான் தேனி மாவட்டம் ஸ்ரீரங்கபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 31.08.2022ம் தேதி நானும் எனது தம்பி செல்வராஜும் மதியம் 02.15 மணியளவில் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று வெளியே வந்தபொழுது ஆஜர் எதிரி சந்திரனை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் எங்கள் இருவரையும் விசாரித்தார்கள். எதிரி சந்திரனை போலீஸ் தெரியுமா என்று கேட்டதற்கு எங்களுக்கு தெரியும் என்று கூறினோம். பின்னர், போலீசார் சந்திரனிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள்.

எதிரி சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையதுதான். பின்னர், எதிரி சந்திரனுடன் நாங்களும் போலீசாரும் சென்று அவர் தோட்டத்தில் வைத்திருந்த அரிவாளை கைப்பற்றி ஒரு ஆவணம் தயாரித்தார்கள். அதில் நானும் செல்வராஜும் கையொப்பம் செய்தோம். அரிவாளை கைப்பற்றி தாயரித்த அத்தாட்சியில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையதுதான். மேற்கூரிய அரிவாள் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரி சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் முதல் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அரிவாளை கைப்பற்றி தயாரித்த அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 கலா எனது அக்கா ஆவார். அ.சா.2 குமரன் எனது மாமா ஆவார். யாரை பார்க்க மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எனது மாமனர் ராஜை எனது மனைவில் காலையில் அழைத்து சென்றிருந்தார் அவரை காண சென்றேன். எனது மாமனரை அழைத்து வரதான் சென்றேன். மருத்துவமனையிலிருந்து எனது மாமனார், எனது மனைவி எங்களுக்கு முன்பாக மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் நானும் செல்வராஜும் இருசக்கர வாகனத்தை எடுப்பதற்காக வெளியே வந்தோம். மருத்துவமனைக்குள் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு வெளியே மேற்கு புறம் க.விலக்கு காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சந்திரன் காயம்பட்டு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சந்திரனை எங்கு வைத்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையின் நுழைவு வாயின் நடுவில் வைத்து விசாரித்தார்கள். எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சென்ற பிறகு 20 நிமிடம் போலீசார் விசாரித்தார்கள். போலீசார் எதிரி சந்திரனை வாய்மொழியாகத்தான் விசாரித்தார்கள். வேறு எதுவும் செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலைய விசாரணைக்கு செல்லவில்லை. பிரிண்ட் எடுத்து வந்து கொடுத்தார்கள். அதில் நானும் எனது தம்பியும்


SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.30 16:07:12 +0530

கையொப்பம் செய்தோம். அது எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரிண்ட் எடுத்து வந்த கொடுத்த கையொப்பமும் சம்மனில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். அத்தாட்சியில் இருக்கும் கையொப்பமும் சம்மனில் உள்ள கையொப்பமும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் அத்தாட்சியிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 எனக்கு உறவினர்கள் என்றால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி சந்திரனை மருத்துவமனை முன்பு வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி சந்திரன் தோட்டத்திற்கு நான் போகும்பொழுது மதியம் 02.00 மணி இருக்கும். எதிரி சந்திரன் தோட்டத்தின் வடக்கு பக்கம் உள்ள முள்ளிலிருந்நது அரிவாளை எடுத்து கொடுத்தார். அ.சா.2தான் அரிவாளை கடையிலிருந்து வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.39 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.30 16:07:16 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:30.01.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

<u>அ.சா:7 (LW 8)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

30.01.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
---------------------------------------------------------------------------

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.40 பி.ப

நான் தேனி மாவட்டம் ஸ்ரீரங்கபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் சம்பந்தமாக தயாரிக்கும் பொருட்கள் நடத்தும் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 31.08.2022ம் தேதி நானும் எனது அண்ணன் ஜெயகுமாரும் மதியம் 12.00 மணியளவில் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று வெளியே வந்து வண்டியை எடுக்கும்பொழுது மதியம் 02.15 மணியளவில் ஆஜர் எதிரி சந்திரனை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் எங்கள் இருவரையும் விசாரித்தார்கள். எதிரி சந்திரன் போலீசாரிடம் தனது குடும்பத்தை பற்றியும் தான் செய்த

குற்றத்தை பற்றியும் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலமாக கொடுத்தார். நானும் எனது அண்ணன் ஜெயகுமார் என்பவரும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம். எதிரி சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் 2வது கையொப்பம் என்னுடையதுதான். பின்னர், எதிரி சந்திரனுடன் நாங்களும் போலீசாரும் சென்று அவர் தோட்டத்தில் வைத்திருந்த மரக்கைப்பிடி போட்ட இரும்பு அரிவாளை பதரிலிருந்து கைப்பற்றினர். அந்த அத்தாட்சியில் நானும் ஜெயகுமாரும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் இருக்கும் 2ம் கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்கூரிய அரிவாள் ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் 2வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அரிவாளை கைப்பற்றி தயாரித்த அத்தாட்சி ஏற்கனவே **அ.சா.ஆ.3ஆக** குறியீடு செய்யப்படடுள்ளது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.2 குமரன் எனக்கு மாமா ஆவார். மருத்துவமனைக்கு எனது அண்ணன் மாமனரை பார்க்க சென்றோம். அவர் மருத்துவமனையில் 3 நாட்களாக உள்நோயாளியாக இருந்தார். உள்நோயாளியாக இருந்தவரைதான் நானும் எனது அண்ணனும் பார்க்க சென்றோம். மருத்துவமனைக்கு வெளியே ரோட்டிற்கு வெளியே எதிர்புறம் கடைக்கு அருகில் வைத்து விசாரித்தார்கள். எதிரியும் போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சந்திரன் தோட்டத்திற்கு செல்லும்பொழுது சுமார் 03.00 மணி இருக்கும். சம்பவ இடத்திலேயே தட்டச்சு செய்திருந்தார்கள். எங்கு பிரிண்ட் எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிரிண்ட் எடுத்து வந்த கொடுத்த கையொப்பமும் சம்மனில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். அத்தாட்சியில் இருக்கும் கையொப்பமும் சம்மனில் உள்ள கையொப்பமும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2 எனது உறவினர் என்பதவால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அத்தாட்சியிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி எந்த


Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.30 16:07:34 +0530

ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனது முன்னிலையில் கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.53 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.01.30 16:07:40 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:30.01.2026